பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 31 சனிக்கிழமை 16.07.2022 கதிர் 142

## வாக்களிக்காமல் இருப்பதற்கு சு.க. தீர்மானம்




ஜனாதிபதித் தேர்தலின் போது எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்காமல் இருக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ☞2



## 450 கி. கஞ்சா அக்கரையில் சிக்கியது

(ந.லோகதயாளன்)

இந்தியாவின் தூத்துக்குடி ஊடாக இலங்கைக்கு கடத்தவிருந்த 450 கிலோ கஞ்சா தமிழ் நாட்டில் கைப்பற்றப்பட்டுள்ளது.

தூத்துக்குடி தருவை ☞2

## இரு அநுரக்களும் களத்தில்! அதனால் ஐமுனைப் போட்டி

கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ததை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தெரிவு தொடர்பில் பல்வேறு அரசியல் கட்சிகளிடையே கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருகின்றன.

இந்நிலையில் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறும் தேர்தலில், கட்சி தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை களமிறக்குவதற்கு தேசிய மக்கள் சக்தி முடிவெடுத்துள்ளது. -என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜே.வி.பியின் பிரச்சார செயலாளருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் விசேட ஊடக சந்திப்பு இன்று நண்பகல் நடைபெற்றது.

இதன்போதே விஜித ஹேரத் எம்.பி. மேற்படி தகவலை வெளியிட்டார். ☞2

## தவிசாளர் பதவியில் இருந்து பீரிஸை நீக்குகிறது மொட்டு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியில் இருந்து பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸை நீக்க கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ☞2

## தொடர்ந்தும் நாட்டுக்கு சேவையாற்ற தயாராம்!

### பதவி விலகல் கடிதத்தில் கோட்டா



நாட்டு மக்களுக்குத் தொடர்ந்தும் தாம் சேவையாற்ற உள்ளேன் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்த ☞2

# படைகளின் இரும்புப் பிடிக்குள் நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு

## எதற்கும் தயார் நிலையில் துருப்புகள்

கொழும்பு,ஜூலை16

புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவுசெய்யும் காலப்பகுதியில் நாடாளுமன்ற வளாகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கு முப்படை தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர். ☞2

## ரஞ்சன் ராமநாயக்க விரைவில் விடுதலை?



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதற்கு தேவையான ஆவணங்களைத் தயார் செய்யுமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அமைச்சர்களான ஹரின் பெர்ணாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ☞2

## தளபதிகள், பொலிஸ் மா அதிபருக்கு அதிகாரங்களை வழங்க அங்கீகாரம்!

### அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்கவும் முடிவு




நாட்டின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்குத் தேவையான அதிகாரங்களை முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு வழங்க பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று மாலை கூடிய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்கவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

திருடிச்செல்லப்பட்ட துப்பாக்கிகள் அத்துடன், நாடாளுமன்றம் கூடும் போது ☞2

## இந்தியத் தூதுவர் பாக்லே சபாநாயகரைச் சந்தித்தார்



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்து கலந்துரையாடினார். ☞2

## சுட மறுத்த ராணுவக் கட்டளைத் தளபதி பதவிப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார்

### பதில் ஜனாதிபதி ரணில் பதவியேற்றதும் நடவடிக்கை

கொழும்பு,ஜூலை16

கொள்ளுபிட்டி, பிளவர் வீதி - பிரதமர் அலுவலகத்தைச் சூழ்ந்து அதனை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்துவதற்காக அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடாத்த மறுத்த - அப்பகுதியின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக செயற்பட்ட - கொழும்பு 112 ஆம் படையணியின் கட்டளை தளபதி பிரி கேடியர் அனில் சோமவீர பொறுப்புக்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கட்டளைத் தளபதி பொறுப்புக்களில் இருந்து நீக்கப்பட்ட அவர் இராணுவ தலைமையகத்துக்கு மீள அழைக்கப்பட்டுள்ளார். பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று ☞2

## வாக்களிக்காமல்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானித்துள்ளது.

கலந்துரையாடி ஏகமனதாக ஒருவரை தெரிவு செய்வதே சிறந்தது என கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில் -

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் (தமிழ்க் காங்கிரஸின்) கஜேந்திரகுமார் உட்பட்ட இரு எம்.பிக்களும், தமிழ் மக்கள் கூட்டணியின் நீதியரசர் விக்னேஸ்வரனும் இந்தத் தேர்தலில் வாக்களிக்காமல் இருக்க முடிவு செய்திருக்கின்றனர் என்று கூறப்பட்டது.

## தளபதிகள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாகச் சந்திக்கும் உரிமையைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்க அமைச்சரவையில் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அண்மையில் நாடாளுமன்றத்தை கைப்பற்றும் முயற்சியின் போது, இராணுவ வீரர்கள் மீது தாக்குதல் நடத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவொன்று, அவர்களின் ரி-56 ரகத் துப்பாக்கிகளை தோட்டாக்களுடன் திருடியுள்ளது. அந்தச் சம்பவத்தில் இராணுவத்தினரிடம் இருந்து திருடப்பட்ட இரண்டு துப்பாக்கிகளையும் தேடுவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பாதுகாப்புத் துறைக்கு அதிகாரம் வழங்க அமைச்சர்கள் தீர்மானித்

## சுட மறுத்த.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சில மணி நேரத்துக்குள்ளேயே இந்த விடயம் பதிவாகியுள்ளது.

இதனைவிட, பிரிகேடியர் சோமவீரவுடன் அருகே இருந்தவாறு பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்ட இராணுவத்தின் சிங்க ரெஜிமென்ட்டின் 12 ஆவது உப படையணியின் கட்டளை அதிகாரி லெப்டினன் கேர்ணல் பி.எச்.ஜீ.பி. குணவர்தனவும் கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி, பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பிரதமர் அலுவலகம் முன்பாக போராட்டக்காரர்கள் பாரிய போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது அவர்கள் பிரதமர் அலுவலகத்தை தமது பொறுப்பிலும் கொண்டு வந்தனர்.

இந்தப் போராட்டத்தின் இடையே, பாதுகாப்புத் தரப்புக்கு போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த அனுமதியளிக்கப்பட்டது.

எனினும் அந்த இடத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த பிரிகேடியர் சோமவீர, பொது மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த மறுத்திருந்தார்.

இவ்வாறான நிலையிலேயே அவர் உள்ளிட்ட அங்கு கடமைகளில் பொறுப்பாக இருந்த உயர் அதிகாரிகளுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து விசாரணைகளை முன்னெடுத்து, அவர்கள் கடமைகளில் இருந்து நீக்கப்பட, துப்பாக்கிச் சூடு முன்னெடுக்காமை குறித்த விடயம் காரணமா என வெளிப்படுத்தி, விடயத்தில் தலையீடு செய்யுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் முறைப்பாடளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இந்தியத் தூதுவர் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றம் இன்று கூட முன்னர் சபாநாயகரது உத்தியோகபூர்வ இல்லத்தில் காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

முக்கியமான தருணத்தில் ஜனநாயகம் மற்றும் அரசமைப்பு கட்டமைப்பை நிலைநிறுத்துவதில் நாடாளுமன்றத்தின் பங்கை பாராட்டிய இந்தியத் தூதுவர், ஜனநாயகம், ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கு தொடர்ந்து இந்தியா உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்தார்.

## ரஞ்சன் ராமநாய.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆகியோர் பதில் ஜனாதிபதியைச் சந்தித்து, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உரிய சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி இந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு பதில் ஜனாதிபதி ரணில், நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 450 கி.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குளம் கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த 450 கிலோ கஞ்சாவே கிழக்கு கடற்கரைச் சாலை வெள்ளபட்டி என்னும் பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளது

கஞ்சாவை ஏற்றி வந்த சாரதி யுடன் மடக்கப்பட்டுள்ளது.

## இரு அநுரக்க.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்வக்கட்சி அரசொன்றை ஸ்தாபிப்பதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டோம். எனினும், ஜனாதிபதி பதவிக்காக பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இதன்மூலம் சர்வக்கட்சி அரசமையுமா என்ற சந்தேகம் எழுகின்றது.

“எனினும், அந்த முயற்சியை நாம் கைவிடவில்லை. எம்மால் முடிந்த அளவில் தலையீடுகளை செய்வோம். அந்த முயற்சி தோல்வி அடையும் பட்சத்தில், ஜனாதிபதி பதவிக்கு எமது கட்சி தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் போட்டியிடுவார்.

‘‘நாட்டு மக்களால் கோரப்படும் தலைமைத்துவம் அவர்தான். எம்மால் நாட்டை மீட்க முடியும். அதற்கு அனைத்து எம்.பிக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வெற்றி கிடைக்கும் பட்சத்தில் சர்வக்கட்சி அரசு அமைக்கப்படும். என்றும் விஜித ஹேரத் கோரிக்கை விடுத்தார்.

இதற்கிடையில் ரணில், சஜித், டலஸ் அழகப்பெரும ஆகியோருக்கு அப்பால் சுயாதீனக் குழுவில் செயற்படும் அநுர பிரியதர்ன யாப்பாவும் இந்தத் தேர்தலில் களமிறங்கத் திட்டமிடுகின்றமையால் தெரிவு ஐமுனைப் போட்டியாக மாறும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

## தொடர்ந்தும்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதவி விலகல் கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் என இன்றைய தினம் நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டது.

சபாநாயகருக்கு அனுப்பப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் கடிதத்தை இன்று நாடாளுமன்றம் கூடிய போது, அதன் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க வாசித்தார்.

நான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற 3 மாதங்களுக்குள் கொவிட் தொற்று உலகம் முழுவதையும் பாதித்தது. அந்த நேரத்தில் இலங்கையைத் தொற்று நோயிலிருந்து பாதுகாக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்து திருப்தியடைகிறேன்.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பொது முடக்கங்களை நடைமுறைப்படுத்தியதன் மூலம், நாடு அந்நியச் செலாவணியை இழந்தது. இதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரம் மேலும் பாதிக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க எவ்வளவோ முயற்சி செய்தேன். அவை பலன் தரவில்லை. நாட்டுக்கான சேவையை ஆற்ற எப்போதும் தயாராகவே இருக்கிறேன்.

- எனவும் கோட்டாபய தனது பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## படைகளின்.........

நாடாளுமன்றச் சுற்றாடலில் அனர்த்தத்துக்கு இடமளிக்கப்பட மாட்டாது, எதையும் எதிர்கொள்ளும் முழுத் தயார் நிலையில் முப்படைகளும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிகின்றது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மற்றும் நாடாளுமன்றப் பிரதானிகளின் கோரிக்கைக்கமையவே பாதுகாப்பு நடவடிக்கை தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் நாட்டில் ஜனாதிபதி பதவி வெற்றிடமாகி இருப்பதாக அறிவிக்கப்பட்ட நேற்றைய தினம் முதல் புதிய ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்துகொள்வதற்கான வாக்களிப்பு இடம்பெற இருக்கும் எதிர்வரும் 20ஆம் திகதிவரை நாடாளுமன்ற வளாகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படுகிறது.

அத்துடன் நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக்காக மேலதிக பொலிஸ் மற்றும் இரணுவக் குழுக்கள் மற்றும் கலகம் அடக்கும் குழுக்களை அழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அதேநேரம், இந்த காலப்பகுதியில் நாடாளுமன்றத்துக்கு வெளியாள்கள் வருகை தருவது தடை செய்யப்படும் என நாடாளுமன்ற அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

அத்துடன் பாராளுமன்றம் இன்று விசேடமாக கூட்டப்பட்டதால், கூட்ட நடவடிக்கைக்கு முன்னர் நாடாளுமன்ற சுற்றுவட்டாரப் பிரதேசத்தில் விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளவும், தியவன்னவாவியில் கடற்படையின் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு தரப்பு அறிவித்துள்ளது.

## தவிசாளர்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதில் கட்சியின் உத்தியோகபூர்வ கருத்துக்கு புறம்பாக டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளிக்கப் போகிறார் என அவர் கூறியமையே இதற்குக் காரணம் என வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒரு கட்சியாக புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் போது பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

தொலைபேசி இலக்கம்:-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## கணிப்புப் பிழைத்தால்..........?

**இலங்கையைப் பொறுத்தவரை வரலாற்று திருப்பத்தில் நாடு நிற்கின்றது. அடுத்த நான்கு நாள்களும் இலங்கையின் தலையெழுத்தை – அதன் எதிர்கால செல்நெறியை – தீர்மானிக்கப் போகும் காலங்கள்.**

**தெரிவு என்னவோ இலங்கையின் அடுத்த ஜனாதிபதியை – கோட்டாபய விட்டுச்செல்லும் எஞ்சிய இரண்டே கால் வருடத்திற்கு – அதிகாரத்தை வைத்திருக்க போகின்றவர் யார் என்பதை நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்கும் விவகாரம்தான்.**

**எனினும் தமிழர் தரப்புக்கும் இந்தத் தெரிவு முக்கியமானது. மிக மிக முக்கியமானது. அவர்களும் அதில் காத்திரமாக பங்களிக்க முடியும். தென்னிலங்கை அரசியல் சூழ்நிலைகள் மிகவும் இறுக்கம் அடைந்தால், சில சமயங்களில் தெரிவு செய்யும் – தீர்மானிக்கும் – அதிகாரம் தமிழர் தரப்புகளின் கைகளுக்கு வந்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

**இந்த வாய்ப்பைச் சரியாக அணுகிக் கையாள முயற்சிக்காமல், தமிழர் தரப்பு கோட்டை விடுமானால் அது வரலாற்றுத் தவறாகிவிடும்.**

**தென்னிலங்கையில் இதுவரை நடைபெற்று வந்த அரசியல் குளறுபடிகளுக்கு தீர்ப்புச் சொல்ல வேண்டிய பொறுப்புதமிழர்களுடையதுஅல்ல. நீதியைநிலைநாட்டும் கடப்பாடும் தமிழர் தரப்புக்குரியதன்று.**

**அத்தகைய தீர்ப்புச் சொல்லும் தொழுக்கு முதலி வேலைக்குத் தமிழர்கள் தரப்பு செல்லவும் கூடாது என்று ஏற்கனவே குறிப்பிட்டு இருந்தோம்.**

**ஏழு தசாப்த காலமாக நியாயத் தீர்வுக்காகப் போராடும் தமிழினம், அந்த அடிப்படையில் மட்டும்தான் இந்த விடயத்தை புத்திசாதுரியமாக அணுக வேண்டும்.**

**வெற்றி ஒரு தரப்புக்கு என்று உறுதியான பின்னர், மாற்றுத் தரப்புடன் போய் பூராயம் பிடுங்கிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.**

**தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு – அவர்களின் நியாயமானஅபிலாஷைகளைநோக்கிமுன்னேறுவதற்கு – தென்னிலங்கைத் தலைமை பௌத்த, சிங்கள வெறிப்போக்குக் குறைந்த – துவேஷம் இல்லாத – ஒரு தலைமை கொழும்பு ஆட்சி பீடத்தில் அமர்வது முக்கியம்.**

**இதில் இன்னொரு விடயமும் உண்டு. 2019 ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற சமயம், ஒருபுறம் சஜித், மறுபுறம் கோட்டா என்று நிலைமை. பேரினவாதத்தை முழுமையாகக் கக்கியபடி கோட்டாபய மேலாதிக்கத் திமிர் வெறியில் நின்றபடியால், யார் வெல்வர், யார் தோற்பார் என்பது குறித்து சிந்திக்காமல், இனவாதம் பேசாமல் அமுக்கி வாசித்த சஜித்தை ஆதரிக்க வேண்டிய கட்டாயம் தமிழருக்கு இருந்தது.**

**இப்போது நிலைமை அதுவல்ல. தெரிவுக்கு முன்னர் நிபந்தனைகள் வைத்து பேச வேண்டும், அதுவும் வெற்றி பெறக்கூடியவருடன் பேச வேண்டும்.**

**வெற்றி பெறக்கூடிய வேட்பாளரை தேவையில்லாமல் பகைப்பதன் மூலம், அப்படி வெற்றி பெறக்கூடிய தலைவர், தமிழர்கள் மத்தியில் இருக்கும் தமிழ் தேசிய விரோத சக்திகளுடன் நெருங்கிய – நெருங்கி போவதற்கான சூழ்நிலைகளை நாமே ஏற்படுத்தி கொடுக்கக் கூடாது.**

**தமிழ் தலைமைகள் இதில் – அரசியல் கணக்கீட்டில் – பிழை விட்டுத் தவறான தரப்புகளை அரவணைத்து, தமிழர்களின் பின்னடைவுக்கு வழி செய்தால், இத்தோடு தமது அரசியல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு வெளியேற வேண்டும். அதை நேரத்துடனே சொல்லி வைக்க விரும்புகிறோம்.**

# ராஜபக்ஷைக்களின் கட்டளைக்கமையவே பதில் ஜனாதிபதி ரணில் செயற்படுவார்!

## சரத்பொன்சேகா காட்டம்



ராஜபக்ஷர்களின் கட்டளைகளுக்கமையவே பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படுவார். மக்களின் போராட்டத்தைத் தொடர்ந்து சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் முயற்சிகள் அனைத்தையும் இவரே இல்லாதொழித்தார்.

புதிய அரசியல் சக்தியை உருவாக்குவதற்கு சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

போராட்டக்காரர்களின் தியாகத்தை நாட்டு மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். எதிர்கால தலைமுறையினருக்காக இளைஞர்கள் தங்களின் நிகழ்காலத்தை நாட்டுக்காக அர்ப்பணித்துள்ளார்கள். காலி முகத்திடலில் 90 இற்கும் அதிகமான நாள்கள் போராட்டத்தில் ஈடுபடுவது சாதாரணதொரு விடயமல்ல எனவும் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொருளாதார நெருக்கடியே அரசியல் நெருக்கடியாக தீவிரமடைந்துள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பலவீனமான நிர்வாகத்தையும், பொதுஜன பெரமுனவின் தான்தோன்றித்தனமான அரசாங்கத்தையும் நாட்டு மக்கள் முழுமையாகப் புறக்கணித்துள்ளனர்.

நாட்டு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மாத்திரமல்ல எதிர்காலத்தில் தோற்றம் பெறவுள்ள அரச தலைவர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் சிறந்த படிப்பினையை எடுத்துரைத்துள்ளார்கள். போராட்டம் நிறைவடைந்து விட்டது இனி வழமை போல் செயற்படலாம் என அரசியல்வாதிகள் ஒருபோதும் கருதக் கூடாது.

போராட்டக்காரர்களின் தியாகத்தை நாட்டு மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். போராட்டக்காரர்கள் அரசியல் வரபிரசாதங்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் போராட்டத்தில் ஈடுபடவில்லை.

எதிர்காலத் தலைமுறையினருக்காக இளைஞர்கள் தங்களின் நிகழ்காலத்தை நாட்டுக்காக அர்ப்பணித்துள்ளார்கள். காலி முகத்திடலில் 90 நாள்களுக்கும் அதிகமாக முகாமிட்டு 'கோ ஹோம் கோட்டா' எனப் போராடுவது சாதாரணதொரு விடயமல்ல.

மக்களின் போராட்டத்தைத் தொடர்ந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பிச்சென்றுள்ளார்.

இது சிறந்த அரசதலைவருக்கு அழகல்ல. நெருக்கடியான சூழ்நிலையை ரணில் விக்கிரமசிங்க சாதகமாக பயன்படுத்திக் கொண்டார். சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்ட போது திரைமறைவில் இருந்து சகல முயற்சிகளையும் தோற்கடித்து விட்டு ராஜபக்ஷர்களின் அனுசரணையுடன் பிரதமர் பதவியை பெற்றுக்கொண்டார்.

ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பதில் ஜனாதிபதி பதவியை பெற்றுக்கொண்டு, தற்போது இடைக்கால ஜனாதிபதி பதவியை அடைய முயற்சிக்கிறார். ராஜபக்ஷர்களின் கட்டளைக்கமையவே பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படுவார். நாடாளுமன்றில் பொதுஜன பெரமுனவிற்கு அதிக பலம் உள்ள காரணத்தால் அவர்களும் ராஜபக்ஷர்களுக்கு சார்பாகவே செயற்படுவார்கள்.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறந்த தரப்பினரை ஒன்றிணைத்து அரசியல் ரீதியில் புதிய சக்தியை உருவாக்குவது சிறந்ததாக அமையும். சிறந்த அரசியல் கலாசாரம் தொடர்பாக நாட்டு மக்கள் அவதானம் செலுத்த வேண்டும். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு சகல அரசியல் கட்சிகளும் நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து சிறந்த தீர்மானத்தை முன்னெடுக்க வேண்டும். – என்றார்.

# வலி.கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருக்கு எதிரான வழக்கில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவு

வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அனுமதியின்றி காட்சிப்படுத்திய விளம்பரப் பலகையை பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் அகற்றியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், வீதி அபிவிருத்தி அதிகார சபை இணைக்கத்துடன் வழக்கை முடிவுக்கு கொண்டுவர விரும்புவதாக மன்றில் தெரிவித்திருந்த போதும் அதற்கான வாக்குமூலத்தை தொடர்ச்சியாக வழங்காத நிலையில் முறைப்பாட்டாளரான வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிப்பு (நோட்டீஸ்) அனுப்புமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வழக்கு தவணையின்போதே மல்லாகம் நீதிமன்றத்தால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றமான பிரதேச சபைக்குச் சொந்தமான அச்செழு அம்மன் வீதியை மத்திய அரசாங்கத்தின் நிறுவனமான வீதி அபிவிருத்தி அதிகார சபை அனுமதிகள் பெறப்படாது புனரமைக்க நடவடிக்கை எடுத்ததுடன் சபையின் அனுமதியின்றி அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளின் படத்துடன் விளம்பரப்பலகையையும் நாட்டியிருந்தது.

அந்த விளம்பரப்பலகையைத் தனதோ சபையினதோ அனுமதியின்றி நாட்டியமையைக் காரணம் காட்டி வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் அகற்றியிருந்தார்.


இந்நிலையில் தவிசாளர் நிரோஷிற்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதில் கடந்த மே மாதம் 18 ஆம் திகதி வழக்குத் தவணையில் தாம் வழக்கைக் கைவாங்குவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக மன்றில் தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலமளித்து வழக்கை இணக்கப்பாட்டுடன் முடிவுறுத்துவதற்காக அடுத்தவாரம் மீள தவணையிடப்பட்டது. எனினும் குறித்த வாக்குமூலத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபை வழங்கியிருக்காத காரணத்தால் மீளவும் கடந்த ஜூன் மாதம் திகதியிடப்பட்டது.

அந்தத் தவணையிலும் முறைப்பாட்டாளரான வீதி அபிவிருத்தி அதிகார சபை வாக்குமூலம் வழங்கவில்லை. இந்த நிலையில் வழக்கின் முறைப்பாட்டாளரான வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிப்பு (நோட்டீஸ்) அனுப்புமாறு மன்று உத்தரவிட்டது. இந்த வழக்கில் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி வி.திருக்குமரனின் வழிகாட்டலில் சட்டத்தரணி எஸ்.ஸ்தேவான் முன்னிலையாகியிருந்ததார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆபிரிக்காவுக்கு மனிதநேய அடிப்படையில் நிதியுதவி




## அமெரிக்கா அறிவிப்பு

உலக அளவில் 8.9 கோடிக்கும் மேற்பட்டோர் கடந்த 2021ம் ஆண்டில் புலம் பெயர்ந்து சென்றுள்ளனர். இந்த வரலாற்று பதிவை, உக்ரைன் போர் அதிகப்படுத்தி உள்ளது. அகதிகள் மற்றும் உள்நாட்டிலேயே புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கையானது நடப்பு ஆண்டில் 10 கோடியை கடந்து உள்ளது என ஐ.நாவின் அகதிகளுக்கான தூதரகம் அதிர்ச்சி தகவலை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஆபிரிக்காவுக்கு மனிதநேய அடிப்படையில் ரூ.4719.47 கோடி நிதியுதவி ஒதுக்கீடு செய்யப்படும் என அமெரிக்காவின் சர்வதேச வளர்ச்சி மற்றும் வெளியுறவுத் துறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இந்த நிதியுதவியானது, அகதிகள், புலம் பெயர்ந்தவர்கள், உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்தவர்கள், நாடற்ற நபர்கள், கட்டாயத்தின் பேரில் புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் ஆபிரிக்கா முழுவதுமுள்ள துன்புறுத்தப்பட்ட மக்களுக்கான வாழ்க்கை பாதுகாப்புக்கான ஆதரவை வழங்கும் வகையில் இருக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

இந்த நிதியுதவி, சுகாதாரம், கல்வி, பாதுகாப்பு மற்றும் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகள் போன்ற அத்தியாவசிய சேவைகளை ஆதரிக்கும் வகையிலும் அமையும்.உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா மேற்கொண்டுள்ள தாக்குதலால் ஏற்பட்ட விலைவாசி உயர்வால், அந்நாட்டின் இறக்குமதியை நம்பியுள்ள பல்வேறு நாடுகளும் அதிர்ச்சியில் தள்ளப்பட்டன. இதுபோன்ற விடயங்களை கவனத்தில் கொண்டு, சர்வதேச கவனம் குறைந்து போயுள்ள உகண்டா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளுக்கு மனிதநேய நெருக்கடி சார்ந்த உதவிகளை வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

அவற்றில் காங்கோ ஜனநாயக குடியரசு மற்றும் தெற்கு சூடானில் இருந்து நடப்பு ஆண்டில் உகண்டாவுக்கு அகதிகளாக 71ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்து உள்ளனர். இந்த வருகை அதிகரித்து வரும் சூழலில் நிதியுதவி அளிக்கும் முடிவை அமெரிக்கா அறிவித்து இருப்பது ஆறுதல் ஏற்படுத்தி உள்ளது என்று கூறியுள்ளனர்.

# பாகிஸ்தானில் குறைக்கப்பட்டன பெற்றோல், டீசல் விலைகள்

## அரசின் நடவடிக்கைக்கு மக்கள் வரவேற்பு



சர்வதேச அளவில் மசகு எண்ணெய்விலைகுறைந்துவருவதால் பாகிஸ்தான் அரசு டீசல் விலையை அதிரடியாக லீற்றருக்கு 40 ரூபா குறைத்துள்ளது. பாகிஸ்தானில் விலைவாசி உயர்வை கண்டித்து எதிர்க்கட்சிகள் உயர்த்திய போர் கொடியால் ஏப்ரல் மாதத்தில் இம்ரான் கான் அரசு கவிழ்ந்தது. உக்ரைன் – ரஷ்யா போர் போன்ற சர்வதேச போர் சூழல் காரணமாக பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு விலை அதிகரித்தது இம்ரான் அரசு கவிழ்வதற்கு மிக முக்கிய காரணமாக இருந்தது. அதன் பிறகு பாஸ் ஷெரீப் தலைமையிலான அரசு பொறுப்பேற்று 3 மாதங்கள் நிறைவடைந்த நிலையில், சர்வதேச அளவில் மசகு எண்ணெய் விலை குறைந்துள்ளது.

மார்ச் மாதத்தில் 120 டொலர் வரை அதிகரித்த மசகு எண்ணெய் விலை தற்போது 97 டொலராக சரிந்தது. மசகு எண்ணெய் விலை சரிவின் பயன் மக்களை சென்றடையும் வகையில் டீசல் லீற்றருக்கு 40 ரூபா 54 காசுகளும் பெற்றோல் லீற்றருக்கு 18 ரூபா 50 காசுகளும் குறைக்கப்படுவதாக பாகிஸ்தான் பிரதமர் பாஸ் ஷெரீப் நேற்றுமுன்தினம் அறிவித்தார். விலை குறைப்பை உடனடியாக அமுல்படுத்த பாகிஸ்தான் நிதி அமைச்சர் இஸ்மாயில் எண்ணெய் மற்றும் எரிவாயு ஒழுங்குமுறை ஆணையத்தை கேட்டுக் கொண்டார். அதன்படி நேற்று முதல் விலை குறைப்பு அமுல்படுத்தப்பட்டது. பாகிஸ்தானின் அந்நிய செலாவணி கையிருப்பு கிட்டத்தட்ட முழுமையாக காலியாகி சர்வதேச நாணயத் திடம் கடன் வாங்க 1 மாதத்திற்கும் மேலாக முயற்சிகள் நடந்து வருகின்றன. இருப்பினும் இதுவரை கடன் கிடைக்காத சூழலிலும் பாகிஸ்தான் அரசு துணிச்சலாக எரிபொருள் விலையை குறைத்து இருப்பது அந்நாட்டு மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.




## உலகளவில் விமான சேவைக்கான தரவரிசை கட்டார் ஏர்லைன்ஸ் நிறுவனம் முதலிடம்

உலகளவில் விமான சேவைக்கான தரவரிசை பட்டியலில் கட்டார் ஏர்லைன்ஸ் நிறுவனம் முதலிடம் பிடித்துள்ளது. ஏர் நியூசிலாந்து 2வது இடத்தையும், எதிஹாட் ஏர்வேஸ் 3வது இடத்தையும் பிடித்தன. விமான சேவையின் தரம், சேவை, பயணிகளின் வசதி, பணியாளர்கள் சேவை, பாதுகாப்பு உள்ளிட்ட பலவற்றின் அடிப்படையில் தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

# பிரதமர் பொஸ் ஷெரிப்பின் மகன் தேடப்படும் குற்றவாளியாக அறிவிப்பு



பாகிஸ்தான் பிரதமர் பொஸ் ஷெரீப்பின் மகன் உட்பட 2 பேர் பண மோசடி வழக்கில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு உள்ளனர். பாகிஸ்தான் பிரதமராக பொஸ் ஷெரீப் கடந்த ஏப்ரல் மாதம் பதவியேற்றார். அதற்கு முன்பாக அவர் மீதும், அவருடைய மகன்கள் ஹம்ஸா, சுலைமான் மீதும் கடந்த 2020ம் ஆண்டு ஊழல் தடுப்பு சட்டம் மற்றும் பண மோசடி வழக்கு பதிவு செய்யப்பட்டது. கடந்த மாதம் 11ம் திகதி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்தபோது, அந்த நாட்டின் புலனாய்வு அமைப்பு நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தது. அதில், 3 பேருக்கும் செம்மன் அனுப்பப்பட்டது. சுலைமான் தற்போது நாட்டில் இல்லை. அவர் வெளிநாட்டில் இருப்பதால் கைது வாரன்ட்டை செயல்படுத்த முடியவில்லை என்று குறிப்பிட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது சுலைமானை தேடப்படும் குற்றவாளி என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# கொரோனா உயிரிழப்பு 63 லட்சத்தை தாண்டியது



உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 63.84 லட்சத்தை தாண்டியது. பல்வேறு நாடுகளை சேர்ந்த 6,384,281 பேர் கொரோனா வைரஸால் உயிரிழந்தனர். உலகம் முழுவதும் கொரோனாவால் 566,183,120 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 537,561,926 பேர் குணமடைந்துள்ளனர். மேலும் 38,986 பேர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர்

## எதிர்க்கட்சிகள் நாளை ஆலோசனை



இந்திய நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் ஜுலை 18ஆம் திகதி தொடங்கி ஓகஸ்ட் 12ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. இந்தக் கூட்டத் தொடரில் பல்வேறு மசோதாக்களை நிறைவேற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.


அதேவேளையில், அக்னிபாத், மகாராஷ்டிரா அரசியல் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இதனால் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் அனல் பறக்கும் எனத் தெரிகிறது.

17 நாள்கள் நடைபெறவிருக்கும் இந்தக் கூட்டத்தின்போது ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி பதவிகளுக்கான தேர்தலும் நடைபெறவுள்ளது.

இதற்கிடையே, நாளை நடைபெறவுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கும் வரும்படி மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது. கூட்டத் தொடரை சுமூகமாக நடத்த அனைத்துக் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதே இந்தக் கூட்டத்தின் நோக்கமாகக் கருதப்படுகிறது.

இந்த நிலையில், எதிர்க்கட்சிகளாலும் நாளை ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இதில் மழைக்காலக் கூட்டத்தொடர், துணை ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் தேர்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# டெல்லியில் இருள் சூழ்ந்த 1,000 இடங்களில் மின் விளக்குகளை அமைக்க மத்திய அரசு திட்டம்



இந்தியாவில் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. அந்தவகையில், தலைநகர் டெல்லியில் இருள் சூழ்ந்த 1,000 இடங்களில் மின் விளக்குகளை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

டெல்லியின் தெற்கு, மேற்கு, வடக்குப் பகுதிகளில் உள்ள சாலைகள், மேம்பாலங்களில் பல இடங்களில் இரவு நேரங்களில் மின் விளக்குகள் இன்றி இருள் சூழ்ந்த நிலையில் உள்ளன என ஆய்வில் தெரியவந்துள்ளது. குறிப்பாக, வடக்கு, தெற்கு டெல்லி மாநகராட்சிக்கு உள்பட்ட பகுதிகளில் அதிக இடங்களில் விளக்குகள் இன்றி இரவில் இருள் சூழ்ந்துள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

அவ்வாறு இருள் சூழ்ந்த பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ள 1,000 இடங்களுக்கு 11 கோடி ரூபா செலவில் எல்.இ.டி. விளக்குகள் அமைக்கும் பணியை மேற்கொள்ள மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் திட் டமிட்டுள்ளது.

இந்தத் திட்டம் இன்னும் 6 மாதங்களில் நிறைவேற்றப்படும் என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியா, சீனா எல்லைப் பிரச்சினையை பேச்சின் மூலம் தீர்க்க வேண்டும்

## தலாய் லாமா வலியுறுத்து

திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா, ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசத்திற்கு இரண்டு நாள் பயணத்தை மேற்கொண்டுள்ளார். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் லடாக் சென்ற தலாய் லாமாவுக்கு மக்கள் உற்சாக வரவேற்பை அளித்துள்ளனர்.

அங்கு நிகழ்வொன்றில் கலந்து கொண்ட தலாய் லாமா, இந்தியா மற்றும் சீனா நாடுகள் தங்கள் எல்லைப் பிரச்சினைகளுக்குப் பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இந்தியாவும் சீனாவும் அண்டை நாடுகள். இரு நாடுகளும் விரைவில் பேச்சு மற்றும் அமைதியான வழிகளில் எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

ராணுவ பலத்தைப் பயன்படுத்துவது பயனற்றது எனவும் தலாய்லாமா குறிப்பிட்டார்.



இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான ராணுவ கமாண்டர்கள் அளவிலான உயர்மட்ட 16 ஆவது சுற்று பேச்சு இன்னும் 3 நாள்களே உள்ள நிலையில், இந்தப் பயணத்தை அவர் மேற்கொண்டமை முக்கியத்துவம் பெற்றுள்ளது.



# சென்னையில் 618 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

## ஒருவர் உயிரிழப்பு

தமிழக மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவத்துறை இன்று காலை வெளியிட்டுள்ள தகவலின்படி, அதற்கு முந்திய 24 மணி நேரத்தில் தமிழகத்தில் மேலும் 2,312 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தொற்று பாதித்தவர்கள் எண்ணிக்கை 35 லட்சத்து 13 ஆயிரத்து 121 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனாவில் இருந்து 2,682 பேர் குணம் அடைந்துள்ள நிலையில், கொரோனாப் பாதிப்புக் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தொற்றுப் பரவலைக் கண்டறிய நேற்று பரிசோதிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 058 எனவும், தலைநகர் சென்னையில் 618 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த தகவல் தெரிவிக்கிறது.

# கேரளாவில் குரங்கு அம்மை பாதிப்பு 5 மாவட்டங்களுக்கு சிறப்பு எச்சரிக்கை




உலகம் முழுவதும் இதுவரை மூவாயிரத்துக்கும் அதிகமானோருக்கு குரங்கு அம்மைத் தொற்று ஏற்பட்டுள்ளதாகத் தரவுகள் கூறுகின்றன. மேற்கு, மத்திய ஆபிரிக்க நாடுகளில் இது அதிகமாகப் பரவியுள்ளது.

இந்தியாவில் முதன்முதலாக நேற்று கேரளாவில் ஒருவருக்கு குரங்கு அம்மை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, கேரளாவில் உஷார் நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருவனந்தபுரத்தில் நடைபெற்ற உயர்நிலை ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின்னர், கேரள சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர், 5 மாவட்டங்களில் சிறப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளதெனவும், திருவனந்தபுரம், கொல்லம், பத்தினம் திட்டா, ஆலப்புழா மற்றும் கோட்டயம் ஆகிய 5 மாவட்டங்களைச் சேர்ந்த பயணிகள் குரங்கு அம்மை பாதிக்கப்பட்டுள்ள நபருடன் ஒரே விமானத்தில் வந்துள்ளதால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

# விபுலானந்தாவில் மாணவர்களின் பிறந்த நாள் பொன் விழா நிகழ்வு

## பழைய ஆசிரியர்களுக்குக் கௌரவம்











(காரைதீவு நிருபர் சகா)

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் 1988, 1991 காலப் பகுதியில் க.பொ.த.சாதாரண தரம் மற்றும் உயர்தரம்பயின்றமாணவர்களின்பிறந்தநாள் பொன் விழா நிகழ்வு நேற்று முன்தினம் காரைதீவில் நடைபெற்றன.

காரைதீவு விபுலானந்த கலாச்சார மண்டபத்தில் பொன் விழாக் குழுத் தலைவர் எல்.ஏ.ராஜேந்திரகுமார் தலைமையில் பொன்விழா நடைபெற்றது .

விழாவில் சிறப்பம்சமாக இந்த அணியினருக்கு கற்பித்த ஆசிரியர்கள் 24 பேரும் அதிதிகளாக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

ஆசிரியர்களை முன்னிலைப்படுத்தி அவர்களுக்கு மாலைசூட்டி, நினைவு பரிசு வழங்கி கௌரவித்திருந்தமை பலரையும் ஈர்த்திருந்தது.

மேலும், முன்னாள் ஆசிரியர் அமரர் நல்லதம்பி மனோகரன் ஆரம்பித்த 'விபுலானந்தநற்சேவை ஒன்றிய சேவை மற்றும் கல்லூரி காலம் பற்றிய காணொலி காண்பிக்கப்பட்டது.

50ஆவதுபிறந்தநாளை முன்னிட்டு கேக் வெட்டிக் கொண்டாடியது.

வரவேற்புரையை, 50 ஆவதுபிறந்தநாளைகொண்டாடும் கிழக்கு மாகாண மேலதிக கல்வி பணிப்பாளர் பொறியியலாளர் நடராஜா சிவலிங்கம் நடத்தினார்.

அங்கு வீணாகானம்,பரதநாட்டியம் உள்ளிட்ட பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஞாபகம்இருக்கின்றதாநண்பர்களே? என்ற வினா விடை நிகழ்ச்சி பலரையும் ஈர்த்திருந்தது. ஆசிரியர் கௌரவிப்பு இடம் பெற்றது .

நிகழ்ச்சி அனைத்தையும் 50 ஆவது பிறந்த நாளை கொண்டாடும் காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி தவநாயகம் மதிவேந்தன் ஆகியோர் நடத்தினர்.

பல வரலாற்றுச் சான்றுகள் பொதிந்த காலத்தின் ஏடு என்ற மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது .

அமரர் ந.மனோகரன் அவர்களின் சகோதரர் முன்னாள் ஆசிரி யர் ந.தியாகராஜா மலரை வெளியிட்டு வைத்தார். மலர்ஆசிரியர் சிவ.ஜெகராஜன் மலர் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

மேலும், பொன்விழா காணும் நண்பர்களின் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

அதன் பின்பு, ஆசிரியர்களின் கருத்துரையிலே முன்னாள்ஆசிரியர்களான ஆர். சண்முகநாதன், வே.தங்கவேல், வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கருத்து வழங்கினார்கள்.

ஆடல்,பாடல் மற்றும் மதியபோசனத்துடன் விழா நிறைவுற்றது.

# காவடி பற்றிய வாக்குவாதம் படுகொலையில் முடிந்தது!

## அக்கரைப்பற்றில் நடந்த அனர்த்தம்

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று பனங்காடு பகுதியிலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயம் ஒன்றில் இடம்பெற்ற மோதலில் கத்திக்குத்துத் தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி சாவடைந்துள்ளார்.

அக்கரைப்பற்று – கண்ணகிபுரத்தைச் சேர்ந்த 27 வயதுடைய குமாரசிங்கம் சிறிதரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். ஆலயத்தில் வருடாந்த உற்சவத்தின்போது இருவருக்கிடையே காவடி தொடர்பான வாக்குவாதம் முற்றியதையடுத்து 27 வயது இளைஞர் மீது 17 வயதுடைய சிறுவன் கத்திக்குத்துத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

படுகாயமடைந்த இளைஞர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மரணித்துள்ளார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்றுப் பிற்பகல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, கத்திக்குத்துத் தாக்குதலை மேற்கொண்ட 17 சிறுவன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# கல்முனையன்ஸ்போரமின் வருடாந்த பொதுக் கூட்டம்

(நூருல் ஹுதா உமர்)



கல்முனை பிராந்தியத்தின் இருப்பு, கல்வி, சமூக, பொருளாதார துறைகளின் மேம்பாட்டில் முழு வீச்சுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும் கல்முனையன்ஸ் போரமானது ஏழு ஆண்டுகள் களம் கண்டு தொடர்ந்தும் வெற்றிகரமாக பயணித்துக்கொண்டிருக்கிறது. அதன் தொடர்ச்சியாக கல்முனையன்ஸ் போரமின் நடப்பு ஆண்டிற்கான வருடாந்த பொதுக் கூட்டம் போரத்தின் காரியாலயத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளர் முபாரிஸ் எம். ஹனீபா தலைமையில் இடம் பெற்றது. இந்த வருடாந்த பொதுக் கூட்டத்தில் 2021 ஏப்ரல் தொடங்கி 2022 மார்ச் வரையான நிருவாக ஆண்டிற்கான வருடாந்த செயற்பாட்டு அறிக்கை நிருவாகப் பணிப்பாளர் பீ. எஸ். சன்ஸீரினாலும், பட்டயக் கணக்காளரினால் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிநிலை அறிக்கை நிதிப் பணிப்பாளர் எம். வை. ரிபாயினாலும் பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் முன்னெடுக்க வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பான ஆலோசனைகளும், முன்மொழிவுகளும் அங்கத்தவர்களிடமிருந்து பெறப்பட்டு நடப்பு ஆண்டின் செயற்றிட்ட நகலும் இக்கூட்டத்தில் தயாரிக்கப்பட்டது. இதன்போது நாட்டின் சமகால பொருளாதார நெருக்கடியினை முகங்கொடுத்து எதிர்வருகின்ற பாதிப்புக்களை முகாமைத்துவம் செய்யவல்ல கல்முனை பிராந்திய மட்டத்திலான பதிலிருப்பு நடவடிக்கைகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

# வைத்தியசாலை ஊழியர் நிந்தவூரில் ஆர்ப்பாட்டம்









(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கக் கோரி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிந்தவூர் வைத்தியசாலை வீதியில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்கள், துணை மருத்துவ சேவையாளர்கள், சுகாதார சேவையாளர்கள் அடங்கலாக பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

இதனை அடுத்து நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.ஏ.நஜீம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பயனாக நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊடாக இவர்களுக்கு தேவையான எரிபொருளை வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

# எரிபொருள் விநியோகத்துக்கு முறையான வேலைத்திட்டம் வகுத்து அறிக்கையிடுக!

## உயர் நீதிமன்றம் சட்ட மா அதிபருக்கு அறிவிப்பு

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் எரிபொருளை, அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக முன்னுரிமை அளித்து விநியோகம் செய்வது தொடர்பிலான முறையான வேலைத்திட்டமொன்றை வகுத்து அது தொடர்பில் உயர் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு, சட்ட மா அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதியரசர் விஜித் மலல்கொட தலைமையிலான மஹிந்த சமயவர்தன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய நீதியரசர்களை உள்ளடக்கிய குழாம் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தது.

மின்சாரம், சமையல் எரிவாயு, எரிபொருள், பால் மா, மருந்துகள் மற்றும் உணவுப்பொருள்களை தட்டுப்பாடின்றி பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமைச்சரவை உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு உத்தரவிடுமாறு கோரி இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்துள்ள இரு அடிப்படை உரிமை மனுக்கள் விசாரணைக்கு வந்த போதே உயர் நீதிமன்றம் இதனை அறிவித்தது.

மனுதாரர்களான இலங்கை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களுக்காக சிரேஷ்ட சட்டத்தரணி ஜி.ஜி. அருள் பிரகாசத்தின் ஆலோசனைக்கு அமைய ஜனாதிபதி சட்டத்தரணிகளான கே. கனக ஈஸ்வரன், உதித்த இகலஹேவா சட்டத்தரணிகளான சுரேன் ஞானராஜா, புலஸ்தி ஹேவமான்ன உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழாத்தினர் இம்மனு தொடர்பில் ஆஜராகின்றனர்.

எஸ்.சி.எவ்.ஆர். 106/22 மற்றும் எஸ்.சி.எவ். ஆர். 107/22 ஆகிய இலக்கங்களின் கீழ் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சார்பில் இந்த இரு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், அதன் உப தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகொட, செயலாளர் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய, பொருளாளர் சட்டத்தரணி ரஜித்த பெரேரா, பிரதி செயலர் சட்டத்தரணி பசிந்து சில்வா ஆகியோரால் இந்த இரு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த இரு அடிப்படை உரிமை மீறல் மனுக்களிலும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, உள்ளிட்ட அமைச்சரவை உறுப்பினர்கள், திறைசேரியின் செயலர், மத்திய வங்கி ஆளுநர், மத்திய வங்கியின் நிதிச் சபை, இலங்கை மின்சார சபை, கனிய எண்ணெய் கூட்டுத்தாபனம், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், சட்ட மா அதிபர் உள்ளிட்ட 42 பேர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

கடந்த தவணையின் போது உயர் நீதிமன்றம் எரிபொருள் கொள்வனவு, விநியோகம், விநியோக நடவடிக்கையின் போது முன்னுரிமை அளிக்கப்படும் துறைகள் எவை என்பதை தெளிவுபடுத்தி அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்டிருந்த நிலையில், அதன்படி வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சின் செயலாளரின் சத்தியக் கடதாசியுடன் கூடிய அறிக்கை ஒன்றை மனுக்கள் விசாரணைக்கு வந்த போது, சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரால் நரின் புள்ளே சமர்ப்பித்துள்ளார்.

அந்த அறிக்கையில், இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவுள்ள எரிபொருள், அதன் விநியோகம் உள்ளிட்ட விவரங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டம் தொடர்பில் திருப்தியடைய முடியாது என, மனுதாரர்களுக்காக மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உதித்த இகலஹேவா மன்றில் குறிப்பிட்டார். இவ்வாறான நிலையிலேயே, நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் எரிபொருளை, அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக முன்னுரிமை அளிக்கப்பட்டு விநியோகம் செய்ய முறையான திட்டமொன்றை உயர் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு, சட்ட மா அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

முன்னதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்துள்ள இரு மனுக்களிலும், கணிய எண்ணெய், மின்சாரம், சமையல் எரிவாயு, உணவு, மருந்து, பால் மா உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுட்டிக்காட்டும் மனுதாரர்கள், அதனால் மக்கள் மிகப் பெரும் பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

அதனால் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என மனுதாரர்களான இலங்கை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதனால் மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்களாகக் கருதப்படும் உணவு, சமையல் எரிவாயு, பால் மா, மின்சாரம், மருந்துகள் போன்றவற்றை தட்டுப்பாடின்றி நிவாரண விலையின் கீழ் தொடர்ச்சியாக மக்களுக்கு விநியோகிக்க முடியுமான செயற்றிட்டம் ஒன்றைத் தயாரிக்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறு இந்த மனு ஊடாகக் கோரப்பட்டுள்ளது.

அதே போல், பொருளாதார நிபுணர்கள், அரச நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றுடன் பேச்சு நடத்தி தற்போதைய பொருளாதார நெருக்கடியை சீர் செய்வதற்கான குறுகிய கால, மத்திய கால நீண்ட கால கொள்கை ரீதியிலான செயற்றிட்டம் ஒன்றை வகுக்குமாறு அமைச்சரவைக்கு உத்தரவிடுமாறும் மனுக்களில் கோரப்பட்டுள்ளன. அத்துடன் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு நிவாரணம் வழங்கத் தேவையான தேசிய கொள்கை ஒன்றைத் தயாரிக்கவும் உத்தரவிடுமாறு மனுவூடாக கோரப்பட்டுள்ளது. அதனைவிட, தேசிய விவசாயம், பால் உற்பத்தி, பண்ணை உற்பத்திகளை அதிகரிக்க கொள்கை ரீதியிலான செயற்றிட்டம் ஒன்றை வகுக்கவும் அமைச்சரவைக்கு உத்தரவிடுமாறு மனுக்களில் கோரப்பட்டுள்ளன.






## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்வு வவுனியாவில்

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நேற்று (வெள்ளிக்கிழமை) வவுனியாவில் நடைபெற்றது. மாணவர்களுக்குச் சுற்றுச்சூழல் சார்ந்த அறிவைப் புகட்டி அவர்களிடையே சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடனும், மாணவர்களின் பன்முக ஆளுமைத்திறனை விருத்தி செய்யும் நோக்குடனும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பசுமை அறிவொளி என்ற நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து இதன் தொடர்ச்சியாகவே வவுனியா கோயிற்குளத்தில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் சோ. சிவநேசன் தலைமையில் கோயிற்குளம் விஷ்ணு ஆலய மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம் பங்கேற்றிருந்தார். சிறப்பு விருந் தினராகச் சிரேஷ்ட ஊடகவியலாளர் வி. தேவராஜ் கலந்து கொண்டார். பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்களிப்பு தொடர்பாக உரையாற்றியிருந்தார்.

இந்த நிகழ்ச்சியில் கண்ணன் அறநெறிப் பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள், ஆலய அறங்காவற் குழுவினர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். மாணவர்கள் அனைவருக்கும் கனடா ரொறன்ரோவின் மனிதநேயக் குரல் அமைப்பின் அனுசரணையுடன் சூழல் விழிப்புணர்வு மேற்கோள்கள் அச்சிடப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

# வெட்டு இயந்திரங்களுக்கு திருகோணமலையில் டீசல்





(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச். என்.ஜயவிக்ரமவின் வழிகாட்டுதலின் கீழ் இம்முறை சிறுபோகவேளாண்மைபயிர்ச்செய்கைசெய்தவர்களின் அறுவடைக்குக் காத்திருக்கும் விவசாயிகளுக்கு வெட்டு இயந்திரங்களுக்கான எரிபொருள் இன்று முதல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

திருகோணமலை லிங்க நகர் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 22 விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 10 லீற்றர் டீசல் வீதம் மொத்தமாக 65 ஏக்கருக்கு 650 லீற்றர் இன்று விநியோகிக்கப்பட்டது.

உப்புவெளி கமநல அபிவிருத்தி பிரிவுக்குட்பட்ட விவசாயிகளே இதனைப்பெற்றனர். இவை கட்டம் கட்டமாக ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.07.2022இல் வெளியிடப்பெற்றது.